# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அருப்புக்கோட்டை.

## அசல் வழக்கு எண். 119/2022

வாதிகள் தரப்பு 1 ஆவது சாட்சியின் வாக்குமூலம் (1873ம் ஆண்டு சாட்சிய சட்டம் 44 வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி, பாண்டி சிவகாமி, தட்டச்சர் என்பவரால் ஆணையிட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

---

| | |
|---|---|
| பெயர் அழகர்சாமி வா.சா.1 | சாதி |
| த/பெ. | மதம் |
| கிராமம் | தொழில் |
| தாலுகா | வயது |

---

முதல் விசாரணை 12-04-2023.

நான் இந்த வழக்கின் 1ம் வாதி, வாதிகள் தரப்பு 1வது சாட்சி. என் தரப்பு முதல் விசாரணையை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். நிரூபண பத்திரத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். படித்துப் பார்த்து விவரங்களைத் தெரிந்துகொண்டுதான் கையொப்பம் செய்தேன்.

20-08-1951ம் தேதியில் வாதிகளின் தந்தை பிரதிவாதியின் தந்தையிடம் பெற்ற பதிவு கிரைய ஆவணத்தின் சார்பதிவக நகல் **வா.சா.ஆ.-1** ஆகும். 23-02-1976ம் தேதியில் வாதிகளின் தாயார் இராமலிங்கம் மகனிடம் பெற்ற பதிவு கிரைய ஆவணத்தின் அசல் **வா.சா.ஆ.-2** ஆகும். 26-05-2022ம் தேதியில் நான் எனது வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் **வா.சா.ஆ.-3** ஆகும். 08-06-2022ம் தேதியில் பிரதிவாதி அவரது வழக்கறிஞர் மூலம் அனுப்பிய பதில் வழக்கறிஞர் அறிவிப்பின் சார்பு நகல் **வா.சா.ஆ.-4** ஆகும். 16-08-2019ம் தேதியிட்ட வாதிகளின் தாயார் குருவம்மாளின் வாரிசுச் சான்றிதழ் கணினி நகல் **வா.சா.ஆ.-5** ஆகும். பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

பிரதிவாதி தரப்பில் தோன்றாத் தரப்பினர் என்பதனால் கு,வி, இல்லையென முடிக்கப்படுகிறது.